<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 145/2016 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | கோபாலன் | நாள் | 28.10.2024 |
| தகப்பனார் பெயர் | மன்னாதன் | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை:-</u>

1) எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால், இல்லை. இவ்வழக்கை யார் யார் மீது, என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தேவன், கண்ணன் என்பவர் மீது தடவழி பாத்தியம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி தேவன் என்பவரின் தந்தை பெயர் என்னவென்றால், கண்ணப்பன். தாயார் பெயர் என்னவென்றால், கமலா ஆகும். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால், விவசாயம் செய்கிறேன். வாதி எனக்கு உறவினரா என்றால், இல்லை. பக்கத்து நிலத்துகாரர் ஆவார்.

2) மேற்படி வாதியின் பாட்டனார் பெயர் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. என்னுடைய நிலத்திற்கும், தாவா நிலத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால், சுமார் 400 மீட்டர் இருக்கும். எங்கள் நிலம் ரோட்டிற்கு தென்புறம் உள்ளது. வாதியின் நிலம் ரோட்டிற்கு வடபுறம் உள்ளது. ரோட்டிற்கு வடக்குபுறமுள்ள நிலத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி ரோட்டை ஒட்டி வடபுறம் உள்ள நிலம் 1, 2 பிரதிவாதிகளுடையது என்றால், சரிதான்.

3) தற்போது வாதி எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். இவ்வழக்கு சொத்து விவரத்தில் என்ன சொத்து விவரம் காட்டப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். தாவா சொத்திற்காக சக்குபந்தி விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் என் முதல் விசாரணை சாட்சிய வாக்குமூலத்தில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதா என்றால், ஆமாம். மேற்படி சங்கதிகள் அனைத்தையும் நான் படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேனா என்றால், ஆமாம். அதிலுள்ள

சங்கதிகளை வழக்கறிஞரிடம் நான் சொன்னேனா என்றால், இல்லை. அதனால், அதில் என்ன சர்வே எண் சொல்லப்பட்டுள்ளது. எவ்வளவு விஸ்தீரணம் சொல்லப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் என்னென்ன என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால், சரிதான்.
4) 1, 2 பிரதிவாதிளின் பெயர் எனக்கு தெரியுமா என்றால், பிரதிவாதிகள் என்றால், யார் என எனக்கு விளக்கம் தெரியவில்லை. அவ்வாறு 1, 2 பிரதிவாதிகள் யார் என தெரியாமல் நான் என் நிரூபன பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால், அவர்கள் பெயர் மட்டும் தான் எனக்கு சரியாக தெரியவில்லை. நான் பிரதிவாதிகள் என குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் யார் என தெரியாமல் தான் இதில் கையெழுத்திட்டுள்ளேனா என்றால், ஆமாம்.

5) கமலகண்ணன், சரவணன் ஆகியோரின் தந்தை பெயர் என்னவென்றால், பிரபாகரன் ஆகும். என் பிரமாண பத்திரிக்கையில் மேற்படி கமலகண்ணன், சரவணனின் தந்தை பெயர் தனசேகரன் என நான் சொல்லியிருந்தால், அது தவறானது என்றால், சரிதான். அவர்களது தந்தை பெயர் பிரபாகரன்தான். 3ம் பிரதிவாதி கண்ணப்ப நாயுடு எப்போது இறந்தார் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

6) வாதியின் பெயர் தேவன் என்பதா? அல்லது தேவராஜ் என்பதா? என்றால், தேவன் என்றுதான் நாங்கள் அழைப்போம். கண்ணப்பன் மற்றும் கமலா ஆகியோர்களுக்கு எத்தனை வாரிசுகள் என்றால், மூன்று ஆண் வாரிசுகளும், இரண்டு பெண் வாரிசுகளும் உள்ளனர். அவர்கள் பெயர் எனக்கு சரியாக தெரியவில்லை.
(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.